Selection Grade to Secondary Grade Teachers

*149Q. Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(a) whether it is a fact that the Government have directed that the services of the Secondary Grade Teachers and other Specialist Teachers in that category under different managements and agencies be taken into account for the purpose of granting Selection Grade Scales of Pay ; and

(b) if, so the reason for the denial of the same benefit to B.T. Assistants and others in the pay scale of Rs. 300—15—420—20—500?

இடைநிலை ஆசிரியர்களுக்கு தேர்வுத்தரம்

திரு. கே.எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுத்தர சம்பள வீதத்தை வழங்குவதற்காக, வெவ்வேறு நிர்வாகத்தின் கீழும், நிறுவனங்களின் கீழும் பணியாற்றும் இடை நிலை ஆசிரியர்கள், ஏனைய சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோரின் பணி கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று அரசு கட்டளையிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், ரூ. 300—15—420—20—500 சம்பள வீதத்தில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்களுக்கு அதே நன்மை மறுக்கப்படுவதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா .நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இது 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. அதை மறு பரிசீலனை செய்வதற்கு கிட்டத்தட்ட 9 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதனால் பல ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஊதியம் கிடைக்கவில்லை. ஆதலால் உடனடியாக முடிவெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இயக்குநர் அவர்கள் அந்த அளவுக்குச் சமமாக இருப்பவர்களுக்குக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதன் காரண மாக எவ்வளவு நிதி செலவாகும் என்ற விவரம் அவரிடம் கேட்கப் பட்டிருக்கிறது. அது வந்தவுடன் இது பற்றி முடிவெடுக்கப்படும்.